


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.07.2023) சென்னை தாஜ் கன்னிமரா ஹோட்டலில், சென்னையில் 2023 அக்டோபர் 8ம் தேதி நடைபெறவுள்ள சைக்ளோதான் போட்டியினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹைச்.சி.எல்.கார்ப்பரேஷன் தலைவர் (வியூகம்) சுந்தர மகாலிங்கம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கல்வியை அடைய

# எத்தகைய தடைகளையும் உடைத்தெறிவோம்!

## எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதிக்கு அடிக்கல் நாட்டியதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 14–

கல்வியை அடைய எத்தகைய தடைகளையும் உடைத்தெறிவோம் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

சைதாப்பேட்டையில் உள்ள எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மாணவர் விடுதிக் கட்டடத்திற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டியதையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :–

இன்னார் படிக்கலாம் இன்னாரெல்லாம் படிக்கக் கூடாதென இருந்த சமூக ஒடுக்குமுறையை ஒழிக்கக் கிளர்ந்தெழுந்தது திராவிட இயக்கம்!

கல்வியைத் தேடிச் சென்னை வரும் நமது மாணவர்கள் தங்கியிருக்க ‘திராவிடர் இல்லம்’ நிறுவினார் நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவரான நடேசனார்.

கல்வி மூலமாகவே ஒடுக்கப்பட்டோர் வளர்ச்சி காண முடியும் என உரிமை முழக்கம் செய்து, இரவுப் பள்ளிகளையும் விடுதிகளையும் தொடங்கினார் எம்.சி.ராஜா அவர்கள்.

அவரது பெயரில் ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் பயில, 1961இல் விடுதி அமைத்தார் பெருந்தலைவர் காமராஜர்.

அந்த விடுதியை நவீன வசதிகளுடன் புதுப்பித்துக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டி, மாணவர்களுடன் உரையாடினேன்.

மாணவர்களிடம் நான் தொடர்ந்து சொல்லி வருவது போல், கல்வி மட்டுமே நம்மைக் காக்கும் சொத்து! கல்வியை அடைய எத்தகைய தடைகளையும் உடைத்தெறிவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# தலைநகரில் தமிழுக்குப் புதிய அடையாளம்!

## உதயமானது தில்லிக் கம்பன் கழகம்!

*புதுடெல்லி, ஜூலை 14-*

*தமிழ் ஆர்வலர்கள் பதினொருபேர் இணைந்து,"தில்லிக் கம்பன் கழகம்" என்ற புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளார்கள். இந்த அமைப்பு தில்லி மாநில அரசில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கம்பராமாயணமும், திருக்குறளும் தமிழுக்குக் கதி என்றார் செல்வக்கேசவராய முதலியார். தமிழ் மொழி நிலைபெறவும், தொய்வின்றி வளரவும் ஒவ்வொரு ஊரிலும் திருவள்ளுவருக்கும், கம்பருக்கும் அமைப்புகள் உருவாக வேண்டும் என்பது தமிழ் அறிஞர்களின் கருத்தாக உள்ளது. தலைநகர் தில்லியில் பல்வேறு தமிழ் அமைப்புகள் இயங்கி வருகின்றன. திருக்குறளுக்கான அமைப்பு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. ஆனால், கம்பன் பெயரில் ஒரு அமைப்பு இல்லாத குறை இருந்து வந்தது. எனவே, அந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் "தில்லிக் கம்பன் கழகம்" தொடங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ் பேசவும், எழுதவும் தெரியாத ஒரு தலைமுறை உருவாகி வருவது கவலையளிப்பதாக உள்ளது. மேலும், அறம் சார்ந்த வாழ்க்கை முறையைப் போதிக்க வேண்டிய அவசியமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கம்பர் இயற்றிய கம்பராமாயணம் மொழிச் செழுமை மிக்கதாக மட்டுமன்றி, அறநெறிகளைப் போதிக்கின்ற காப்பியமாகவும் திகழ்கிறது. எனவே, "தில்லிக் கம்பன் கழகம்" தமிழ் மொழிகளுக்கிடையே இணக்கத்தை உண்டாக்குவதற்கும் பணியாற்றும். மொழியையும், அறத்தையும் நிலைபெறச் செய்வதற்கும். பல்வேறு செயற்குழுவினரின் பெயர்களும், பொறுப்புகளும் பின்வருமாறு :-*

*தில்லிக் கம்பன் கழகச் செயற்குழு,*

*நிறுவனர் தலைவர் கே.வி.கே.பெருமாள்,*

*துணைத் தலைவர் - எம். ரமேஷ்,*

*செயலாளர் - எஸ்.பி. முத்துவேல்,*

*இணைச் செயலாளர் - ஏ.புகழேந்தி,*

*பொருளாளர் - டி.வி. சரவணன் ராஜன்,*

*இணைப் பொருளாளர் - எம்.எஸ்.ரவி.*

## வாட்ஸ் அப்பில் வந்தது!

- பி.ஜே.பி. ஆட்சி அமைந்த பிறகு சிலிண்டர் மானியம் படிப்படியாக குறைக்கப்பட்டது.
- 400 ரூபாய் அளவிற்கு வந்துகொண்டிருந்த மானியம் 35 ரூபாயாக குறைக்கப்பட்டது.
- தோராயமாக 350 X 12 மாதம் = 4200 ரூபாய்
- 8 வருட பி.ஜே.பி. ஆட்சி 4200 X 8 = 33600 ரூபாய் ஒவ்வொரு சாமானியனுக்கும் கிடைக்க வேண்டிய பணத்தை அரசாங்கமே ஏமாற்றி உள்ளது

**ஆப் கி மோடி சர்கார்**

**இவர்கள் கலைஞர் உரிமைத் தொகை பற்றி பேசவே தகுதியில்லாத நபர்கள்.**

**இது ஒரு உதாரணம் மட்டுமே**

**பெட்ரோல் டீசல் என பல தரப்பட்ட பிரிவுகள் உண்டு.**

## திருச்சியில், ஜூலை 26 அன்று

# முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றும் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்” உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு, மாநிலம் முழுக்க கழக மாவட்டங்களை ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அதிலுள்ள ஒவ்வொரு மண்டல வாரியாக, வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக்கூட்டம் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்” வருகிற 26-07-2023 (புதன்கிழமை) அன்று திருச்சி, ராம்ஜி நகர், கருமண்டபம் என்ற இடத்தில், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

டெல்டா மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 15 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1. அரியலூர், 2. பெரம்பலூர், 3. கடலூர் கிழக்கு, 4. கடலூர் மேற்கு, 5. மயிலாடுதுறை, 6. நாகப்பட்டினம், 7. திருவாரூர், 8. தஞ்சாவூர் வடக்கு, 9. தஞ்சாவூர் மத்திய, 10. தஞ்சாவூர் தெற்கு, 11. திருச்சிராப்பள்ளி தெற்கு, 12. திருச்சிராப்பள்ளி மத்திய, 13. திருச்சிராப்பள்ளி வடக்கு, 14.புதுக்கோட்டை தெற்கு, 15. புதுக்கோட்டை வடக்கு**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்- 12.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### சென்னை - தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கை வனப்புடன்

# கண்காட்சி அரங்குகள் - திறந்தவெளி திரையரங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, ஜூலை 14-*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை செயல்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் (12.7.2023) சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்த வெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர்கா.இராமச்சந்திரன் ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.*

*இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 12.7.2023 அன்று சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய இருக்கின்ற இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை ஏற்படுத்திட சுற்றுலாத் துறை அமைச்சர்கா. இராமச்சந்திரன் அவர்களுடன் அமையவிருக்கின்ற சென்னைத் தீவுத்திடலில் இயற்கை வனப்புடன் நகர்ப்புர பொதுச் சதுக்கம் அமைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, இதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, முதலமைச்சர் இதற்கு இறுதி வடிவம் கொடுத்த பிறகு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, அதன் பின்னர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்த பணிகளை துவங்குவதற்குண்டான முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு இந்தப் பகுதியை ஆய்வு செய்திருக்கின்றோம்.*

*சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் உரிய காலத்திற்குள் செயல்பாட்டுக்கு வர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற பெருந்திட்டங்களை இரண்டு மாதத்திற்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகியோர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வருவதால் முதலமைச்சர் மேற்கொள்ளுகின்ற அந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக இன்றைக்கு தொடர் நடவடிக்கையாக இரண்டு மாதத்திற்கு ஒரு முறை நடைபெற்ற பணிகளுடைய முன்னேற்றங்களை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்ற சூழலில் இந்தப் பணிகள் தற்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. வெகுவிரைவில் இந்த பணிகளை மேற்கொள்வதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், சுற்றுலாத்துறையும் இணைந்து இந்த பணிகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.*

*சென்னைத்தீவுத்திடலில் மொத்தமிருக்கின்ற 30 ஏக்கர் நிலப்பரப்பானது கூவ மாற்றின் ஒரு பக்கம் 18 ஏக்கர் நிலப்பரப்புடனும் மற்றொரு பக்கம் 12 ஏக்கர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளதால் அதனைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றாற்போல் இப்பகுதியில் உலகத்தரத்தில் அமைக்கப்பட இருக்கின்ற கண்காட்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், தங்கும் விடுதிகள், சுற்றுலா வருபவர்களை கவரும் வகையிலும் சென்னையில் வசிப்பவர்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களுடனும் இத்திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதால் இப்பணிகள் முழுமை பெற்றப்பிறகு பெருமளவில் சென்னை மாநகர மக்களுக்கும், வெளி மாநில, மாவட்ட சுற்றுலா பயணிகளுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்த பகுதி அமையும் என தெரிவித்துக் கொண்டு, வடசென்னையை முதலமைச்சர் ரூ.1000கோடி மதிப்பீட்டில் மூன்று ஆண்டுகளில் மேம்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.*

*ஆகவே, இந்த திட்டமும் வடசென்னையினுடைய முன்னேற்த்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டு அனைவருக்கும் பயன்பெறக்கூடிய ஒரு சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய ஒரு அரங்கமாக இதை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கின்றோம். இறுதி வடிவத்தை முதலமைச்சர் இறுதி செய்வார்கள்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.*

*இந்த ஆய்வின்போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்அன்சூல் மிஸ்ரா, சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர்சந்தீப் நந்தூரி, சி.எம்.டி.ஏ முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், சுற்றுலாத்துறை, வருவாய்த் துறை மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்*



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு சுழலும் சொல்லரங்கம் பல்லடம் ரோடு, ராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன் நடுவராகவும், கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.




சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அலுவலக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (12.07.2023) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வாகி உள்ள 151 நில அளவர்கள் மற்றும் வரைவாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நில நிர்வாக ஆணையர் எஸ்.நாகராஜன், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, நிலஅளவை பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குநர் (பொ) அ.கண்ணபிரான், இணை இயக்குநர்கள், மண்டலத்துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.